பக்கங்கள் 15

# மாலை முரசு

## 13,588 மாணவர்கள் 9 பாடங்களிலும் 'ஏ'

இவ்வருடம் நடைபெற்ற 2022ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 13 ஆயிரத்து 588 மாண வர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள் ளனர். 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை 01.12.2023 அதிர்வு 123

# யாழ். வேம்படி மகளிர் பாடசாலை அகில இலங்கை ரீதியில் சாதனை

## 110 மாணவிகளுக்கு 9 பாடங்களிலும் 'ஏ'

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

2022ஆம் ஆண்டுக்கான ஜி.சீ ஈ. சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகளில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத் தைக் கண்டி மகமாயா பெண்கள் கல்லூ ரியும், இரண்டாவது இடத்தை யாழ்ப்பா ணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலையும், மூன்றாவது இடத்தைக் கொழும்பு றோயல் கல்லூரியும் 04



# சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் இன்று கைது!

## டிசம்பர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(கே.பாரதி)

வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று முன்னிலையான போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார். 04



### தமிழகப் பொலிஸாரின் அதிரடி வேட்டையில்

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 1,500 கிலோ பீடி இலைகள் சிக்கின

(ந.லோகதயாளன்)



இந்தியாவின் தூத்துக்குடி கடற்கரையில் இருந்து படகு மூலம் இலங்கைக்குக் கடத்த முற்பட்ட பீடி இலை பண்டல்க ளைத் தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் பொலிஸ் நிலைய எல்லைப் பரப்பில் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது 04

## யாழ். பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசால் விசேட நிதியுதவி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. 04

# ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்த சகலரும் ஒன்றிணைவோம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறைகூவல்

(கி.வசந்தரூபன்)

ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைக்கு எதிரான போராட் டத்தை வலுப்படுத்த அனைவரும் நாளை வவுனியாவில் ஒன்றிணைய வேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரி வித்துள்ளது.

அக் கட்சியின் வன்னி மாவட்ட செய லாளர் தோழர் என்.பிரதீபன் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, 04



# காலி – கொழும்பு பிரதான வீதியில் விபத்தில் ஒருவர் பலி; நால்வர் காயம்!



காலி – கொழும்பு பிரதான வீதியில் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பட்டா ரக வாகனம் ஒன்று விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். நால்வர் காயமடைந்துள்ளனர் என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த நால்வரும் பலப்பிட்டிய ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவையில் கட்டடம் ஒன்றில் வேலை செய்துவிட்டு பத்தேகம நோக்கிச் சென்று கொண்டிருந்த குழுவினரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

வாகன சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கம் காரணமாகவே வாகனம் சாலையை விட்டு விலகி கொன்கிரீட் சுவரொன்றில் மோதியுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் வாகனத்தின் பின் பக்கத்தில் பயணித்தவர்களில் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# சட்டவிரோதமாக விலங்குகளை வேட்டையாடியவர் கைதானர்!

**(ரஸீன் ரஸ்மின்)**

சட்ட விரோதமாக விலங்குகளை வேட்டையாடி பாரியளவில் இறைச்சி விற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவர் நேற்று (30) புத்தளம் மஹக்கும்புக் கடவல – ரல்மத்கஸ்வேவ பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹக்கும்புக்கடவெல ரத்மல்கஸ் வேச பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று வன ஜீவராசிகள் திணைக் களத்தினர் தெரிவித்தனர்.

பாலாவி விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய, புத்தளம் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் மற்றும் கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்களத்தினருடன் இணைந்து சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது சுமார் 20 கிலோ கிராம் மான் இறைச்சியுடன் அந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொண்ட போது, வீடு மற்றும் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துப்பாக்கிகள், 3 ரவைகள், 6 பாவிக்கப்பட்ட ரவைகள் உள்நாட்டு துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 5 கிலோ ஈய உருண்டைகள், 15 மான் கொம்புகள், 9 காட்டுப் பன்றித் தலைகள், முள்ளம்பன்றியின் முட்கள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன என்று கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மின் விளக்குகள் மற்றும் வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் ஏனைய உபகரணங்களும் மீட்கப்பட்டன என்று தெரிவித்தனர்.

# அரச ஊழியர்கள் 8 ஆயிரத்து 400 பேரை நிரந்தரமாக்குவதற்கு அமைச்சரவை பத்திரம்!

அரச ஊழியர்கள் 8 ஆயிரத்து 400 பேரை நிரந்தர ஊழியர்களாக் குவதற்குப் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் அதிக எண்ணிக்கையான அரச ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

அதற்கமைய, இந்த அமைச்சில் 4 லட்சத்து 95 ஆயிரம் ஊழியர்கள் பணி புரிகின்றனர் என்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சு மற்றும் அதன் நிறுவனங்களில் 18 முதல் 20 வருடங்களாக நிரந்தர நியமனம் பெறாத பழைய ஊழியர்கள் உள்ளனர் என்றும் அவர்கள் நிரந்தர நியமனம் செய்யப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# கொழும்பு மாநகர சபை பிரிவில் டெங்குப் பெருக்கம் அதிகரிப்பு

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட 72 அரச நிறுவனங்கள் மற்றும் 53 பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் இனங்காணப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபையின் சுகாதார திணைக்களத்தால் 121 அரச நிறுவனங்கள் மற்றும் 65 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

மழையுடனான காலநிலை காரணமாக டிசெம்பர் மாதம் டெங்கு பரவும் அபாயம் காணப்படுகிறது என்று



கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள மொத்த டெங்கு நோயாளர்களில் 47 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்தும் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளது.

கொதட்டுவ, மஹரகம போன்ற பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்துள்ள உணவகம் ஒன்றுக்கு கல்வியங்காட்டில சீல்!

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவின் பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் தலைமையிலான குழுவினரால் கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பல சுகாதார சீர்கேடுகள் இனங் காணப்பட்டன. ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து சுகாதார சீர்கேட்டுடனேயே உணவகம் இயங்கி வந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் திகதி முடிவடைந்த காலாவதியான உணவு பொருள்களும் பொது சுகாதார பரிசோதகர்களால் அங்கிருந்து மீட்கப்பட்டன. இதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் புதன் கிழமை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சுகாதார சீர்கேடு, காலாவதியான உணவு பொருள்கள் வைத்திருந்தமை என்பவற்றுக்குத் தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும்வரை உணவகத்தைச் சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகருக்குக் கட்டளை வழங்கினார்.

இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனால் உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது.

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் உள்ளிட்ட இருவர்

# போலி ஆவணத்தில் கடவுச்சீட்டு பெற்று வெளிநாடு செல்ல முயன்றபோது கைது!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

போலி ஆவணம் மூலம் கடவுச்சீட்டு பெற்று வெளிநாடு செல்ல முயன்ற யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த நபர் உள்ளிட்ட இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருச்சி மத்திய பஸ் நிலையப் பகுதி தங்கும் விடுதிக்கு கன்டோன்மென்ட் பொலிஸ் ஆய்வாளர் சிவக்குமார் உள்ளிட்ட பொலிஸார் சென்று அங்கு தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே. சாதுசன் (24) என்பவரைக் கைது செய்து விசாரித்துள்ளனர்.

விசாரித்தபோது அவர் கடந்த இரு மாதங்களுக்கு முன் இலங்கைக் கடவுச்சீட்டு மூலமாக தமிழகம் வந்து, பின்னர் போலி ஆவணங்கள் மூலம் இந்தியக் கடவுச்சீட்டு பெற்று வெளிநாடு செல்ல இருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து சாதுசன், கடவுச்சீட்டு எடுக்க உதவிய சென்னை சதானந்தபுரத்தைச் சேர்ந்த சு. ஜோயல்புகழேந்தி (54) ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து இலங்கைக் கடவுச்சீட்டுகள் மற்றும் பல்வேறு போலி ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## யாழ். பல்கலை...

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்த நிதியுதவித் திட்டத்தை இன்று ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதி 30 முப்பது இலட்சம் ரூபா இன்று காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயினால் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் இந்திய அரசால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர்கல்விப் புலமைப்பரிசில் (ஐ.சி.சி.ஆர்). பெற்று இந்தியாவில் உயர்கல்வி பெறச் செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கான அனுமதிக் கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பொருளாதார நிலையில் சவாலுக்குட்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் 100 பேரின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 11 ஆம் திகதி, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி எல். முருகன் அறிவித்த படி, யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசு முடிவு செய்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் சகல பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## ஊடகவியலாளர்கள்...

"வடக்கு – கிழக்குப் பகுதிகளில் பொலிஸார் நடந்து கொள்ளும் முறையானது நாட்டின் அரசமைப்பு சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளதுடன், அப்பாவி மனிதர்களின் உயிர்களை பலி எடுப்பதாகவும் உள்ளது. அந்த விடயங்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு கைது செய்யப்படுவது இலங்கை முழுவதும் நடந்து வருகின்றது. அந்தவகையில், வவுனியாவில் ஊடகவியலாளர்களுக்கு பொலிஸாரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் கூட்டாக இணைந்து இழைக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களால் நாளை சனிக்கிழமை நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு எமது கட்சி முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

இலங்கைப் பொலிஸார் அரசின் நிகழ்ச்சி நிரலுக்குச் செயற்படுகின்றார்களா? எனும் சந்தேகம் எழுகின்றது. யாழ்ப்பாணம் – சித்தங்கேணியிலும் ஒரு அப்பாவி இளைஞர் பொலிஸ் நிலையத்தில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டார். இதேபோன்றுதான் வவுனியாவில் மாவீரர் நினைவு நாளில் அரச பாதுகாப்புத் துறை நடந்து கொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஊடகவியலாளர்களுக்கு இந்த நிலை எனில் அப்பாவிப் பொதுமக்களுக்கு என்ன நிலை என்பதை உணர வேண்டியவர்களாக இன்று தமிழ்ச் சமூகம் உள்ளது என்பதே உண்மையாகும்.

நாளை சனிக்கிழமை வவுனியா பழைய பஸ் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும் கண்டனக் கவனயீர்ப்புப் போராட்டத்தைப் பலப்படுத்துமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## 13,588 மாண...

கடந்த முறை 11 ஆயிரத்து 53 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றிருந்தனர். இம்முறை பெறுபேறு அதிகரித்துள்ளது. 9 ஏ பெற்ற மாணவர்களின் விகிதம் 3.39 ஆகும்.

2022ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஏ.ஏ சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்று அதிகாலை வெளியிடப்பட்டுள்ளன என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தங்களது பெறுபேறுகளை றறற. னழநநெவள.டம அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரிகளுக்குள் பிரவேசித்து அறிந்து கொள்ள முடியும் என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 94 ஆயிரத்து 450 பாடசாலை பரீட்சார்த்திகளும், 78 ஆயிரத்து 103 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்கலாக மொத்தமாக 4 இலட்சத்து 72 ஆயிரத்து 553 பேர் தோற்றியிருந்தனர்.

வெளியிடப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மீள் பரிசீலனை விண்ணப்பங்கள் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இலங்கைக்குக்...

தாளமுத்துநகர் கடற்கரையில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பீடி இலைகள் அடங்கிய 40 பண்டல்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட 40 மூடைகளிலும் 1,500 கிலோ பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை ஏற்றி வந்த நான்கு சக்கர வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## சர்ச்சைக்குரிய...

மேலதிக விசாரணைகள் நிமித்தம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இரண்டாவது நாளாக இன்று அவர் முன்னிலையான சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

பல மாதங்களாக வெளிநாட்டில் தங்கியிருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக உத்தரவிட்டிருந்த நிலையில், அவர் நேற்று அந்தத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். அங்கு அவர் சுமார் 8 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

அவர் இன்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இரண்டாவது நாளாக வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையானதையடுத்துக் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, அவரைக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது அவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த மே மாதம் இடம்பெற்ற போதனையின்போது, ஏனைய மதங்கள் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டார் என்று போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதன்பின்னர் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். வேம்படி...

பெற்றுள்ளன.

அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் முதலாவது இடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பெற்றுள்ளது. இந்தப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 270 மாணவிகளில் 110 பேர் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 74 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 16 மாணவிகள் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 17 மாணவர்களும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் 6 மாணவர்களும் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்றுள்ளனர்.



# மன்னார் பாப்பாமோட்டையில் திண்மக்கழிவு கொட்ட கொழும்பு நீதிமன்றம் தடை விதிப்பு!

**மன்னார் நகர பகுதியில் திண்மக்கழிவு, மலக்கழிவு அகழ்வு பணி நிறுத்தம்; மக்கள் பாதிப்பு!!**

(மன்னார் நிருபர்)

மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி, பாப்பாமோட்டை பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் மலக்கழிவு மற்றும் திண்ம கழிவுகளை கொட்டி சேகரிக்க கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் கடந்த 23 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனால் மன்னார் நகர சபையால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் மலக்கழிவு அகழ்வு ஆகியவை உடனடியாக நிறுத்தப்பட்டது.

மன்னார்–யாழ்ப்பாணம் பிரதான வீதி மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாப்பாமோட்டை பகுதியில் மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், சுமார் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக அமைக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு முதல் மன்னார் நகர சபை பிரிவில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் மற்றும் மலக் கழிவுகள் அகற்றப்பட்டு அந்த நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாடுகள் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்று வருகின்றது.

மன்னார் நகர சபை பிரிவில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவு மற்றும் மலக் கழிவுகளும், ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மலக் கழிவுகளும் இங்கு சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது.

இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மாசுபடுவதாகவும், இந்தாப் பகுதி பறவைகள் சரணாலயத்துக்கு உரிய இடம் என்றும் தெரிவித்துக் கடந்த 8 ஆம் திகதி கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு மேன் முறையீட்டு நீதி மன்றத்தால் கடந்த 23 ஆம் திகதி மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் எவ்வித கழிவுகளும் கொட்டக் கூடாது என்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக நேற்று முன்தினம் (29) புதன்கிழமை முதல் மன்னார் நகர சபை பிரிவில் மன்னார் நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வந்த மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது.

திண்மக்கழிவு மற்றும் மலக்கழிவு அகழ்வு நிறுத்தப்பட்ட மையால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள மலசல கூட மலக்கழிவுகள் நாள் ஒன்றுக்கு 7 தடவைகள் அகற்றப்பட்டு வருகிறது.

தற்போது மல சல கூட மலக்கழிவுகள் வைத்தியசாலையில் அகழ்வு செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளமையால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகளில் உள்ளவர்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பல பாகங்களில் திண்மக் கழிவுகள் அகழ்வு செய்யப்படாமையால் பல பாகங்களிலும் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதனால் மக்களும் அரச திணைக்களத்தினர் மற்றும் வைத்தியசாலை தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை மீளப்பெற்றுக் கொள்ள மன்னார் நகர சபை எதிர்வரும் திங்கட்கிழமை (4) கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளது.

இந்தக் காணி அரச காணியாகக் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் நகர சபைக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் 2012 ஆம் ஆண்டு இந்தக் காணியில் திண்மக்கழிவு மற்றும் மலக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்தக் காணி பறவைகள் சரணாலயத்துக்குச் சொந்தமானதாக அடையாளம் காணப்பட்டு 2016 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித்தின் சண்டப் பிரசண்டம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறியும் போராட்டத்தைத் தொடருமாறு பாப்பரசர் பிரான்சிஸ் விடுத்துள்ள விடுத்துள்ள வழிகாட்டலுக்குத் தமது கட்சி கட்டுப்படும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

"பாப்பரசரின் கூற்றுக்கு எங்கள் கட்சி துணை நிற்கிறது. ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறியும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் நான் உறுதியளிக்கிறேன்" என்று சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கின்றார்.

"இந்த விவகாரம் தொடர்பாக நாங்கள் இந்தச் சபையில் பல விவாதங்களை நடத்தியுள்ளோம். ஆட்சியாளர்கள் ஒவ்வொருவராக உண்மையைக் கண்டறிந்து குற்றவாளிகளைத் தண்டிப்பார்கள் என உறுதியளித்தனர். மிக சமீபத்திய விவாதம் உட்பட பல விவாதங்கள் இங்கு நடத்தப்பட்டுள்ளன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ நீதியை நிலைநாட்டுவார் என உறுதியளித்து ஆட்சிக்கு வந்தார். இந்த தாக்குதல்களுக்கு மூளையாக செயல்பட்டவரைக் கண்டுபிடிப்பார் என உறுதியளித்தார். விசாரணைகளில் ஸ்கொட்லண்ட்யார்டின் உதவியை நாடவுள்ளார் எனத் தற்போதைய ஜனாதிபதி தெரிவித்தார். பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக மற்றுமொரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க முன்மொழியப்பட்டது. அமெரிக்காவின் 9/11 தாக்குதல் விசாரணைக் குழுவின் வடிவில் ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை எதிர்க்கட்சியின் தலைமையில் நியமிக்க வேண்டும் என்று நாங்கள் முன்மொழிந்தோம். நாங்கள் அதை ஆதரிப்போம். இதுவரை எதுவும் நடக்கவில்லை. இன்னும் நீதி வழங்கப்படவில்லை. இதுவரை நாம் பார்த்தது இந்த குற்றத்திற்கு காரணமானவர்களை மறைப்பதையோ அல்லது பாதுகாப்பதையோ தவிர வேறில்லை.

"இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பான எவரையும் அல்லது தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட எந்த அதிகாரியையும் நாங்கள் பாதுகாக்க மாட்டோம்'' - என்று அவர் நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருக்கின்றார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான உண்மைக் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் எதிர்க்கட்சித் தலைவரின் பற்றுறுதி பாராட்டுக்குரியதுதான். ஆனால் அவ்விடயத்தில் குற்றவாளிகள் என அவர் உருவகப்படுத்துவோர் அரசியலில் அவரின் எதிரணித் துருவத்தில் இருப்பவர்கள் என்று கருதப்படுவதால்தான் தனது அரசியல் எதிரிகளை வீழ்த்தும் வாய்ப்பு இந்தச் சாக்கில் கிடைக்கும் என்று எண்ணி அவர் இந்தத் துள்ளல் துள்ளுகின்றார் என்பது வெளிப்படையானது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோர் போல பல மடங்கு எண்ணிக்கையான தமிழர்கள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மிக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அப்பாவிப் பொதுமக்கள் அப்போது ஆயிரக்கணக்கில் கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள். இலங்கையின் சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாத மனிதப் பேரவலக் கொடூரம் அப்போது கட்டவிழ்ந்தது. ஆனால் அவற்றுக்கு நீதி தேடுவதில் இந்த ஆக்ரோஷம் எதிர்க்கட்சித் தலைவருக்கு வரவில்லை.

ஏனென்றால் தமிழருக்கு நீதி தேடினால், அது பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் ஊறித் திளைத்திருக்கும் தென்னிலங்கையின் வாக்கு வங்கியைப் பாதித்துவிடும்.

அதனால்தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இத்துணை திமிர் எடுக்கும் எதிர்க்கட்சித் தலைவர், யுத்தத்தின் இறுதிக் கட்டப் பேரவலங்களுக்கு நீதி கோருவதில் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார். அவரின் சண்டப் பிரசண்டம் கூட வாக்குவேட்டைகானது மட்டுமே என்பது தெளிவானது.

# காட்டு யானைகளால் வீடுகள் சேதம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, மொறவெவ பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அவ்வை நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் (29) இரவு காட்டு யானைகள் இரண்டு வீடுகளை தாக்கியதில் அந்த வீடுகள் கடுமையான சேதத்துக்கு உள்ளாகின.

இந்தப் பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலவும் யானை மனித மோதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பயன் தரும் மரங்கள் மற்றும் விவசாயப் பயிர்களும் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியின் நலன்புரிசங்கப் பொதுக் கூட்டம்!

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்க பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளது. பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹறிகரன் தெரிவித்துள்ளார்.





# தேசிய இளைஞர் நல்லிணக்க பரிமாற்று வேலைத் திட்டம்!

(ஹஸ்பர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து தேசிய இளைஞர் பரிமாற்று வேலைத் திட்டம் நிகழ்வை நடத்தின.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று (30) திருகோணமலை தம்பலகாமம் குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இந்த இளைஞர் பரிமாற்று வேலைத் திட்டமானது எதிர்வரும் 4 ஆம் திகதிரை இடம்பெறவுள்ளது.

இதில் கம்பஹா மாவட்ட அத்தன கல்ல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சகோதர மொழி பேசும் 25 இளைஞர், யுவதிகள் பங்கேற்றுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களுக்கும் சகோதர மொழி பேசும் மக்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு சக வாழ்வு நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் ஒரு திட்டமாக இது காணப்படுகிறது.



தம்பலகாமம் பகுதியில் உள்ள தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளின் வீட்டில் நான்கு நாள்கள் தங்கியிருந்து அவர்களின் கலை கலாசாரம் பாரம்பரிய முறைகள் தொடர்பிலும் இதன் போது அவர்கள் புரிந்து கொள்வதன் ஊடாக சமாதானம் ஒற்றுமை போன்றன கட்டியெழுப்பப்படும் நோக்கில் ஒரு நிகழ்வாக அமையப் பெற்றுள்ளது.

இதன் முதல் நிகழ்வில் இளைஞர், யுவதிகளுக்குத் தம்பலகாமம் மக்களால் அமோக வரவேற்களிக்கப்பட்டது.

இதில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உதவி பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






# இலங்கைக்கான இந்தியத் தூதர் யாழில் உலருணவு வழங்கினார்

இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லே இன்று வெள்ளிக்கிழமை (01) யாழ்ப்பாணத்தில் வறிய மக்களுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் உலருணவுப் பொதிகளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்வில் 480 பேருக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# மத்தியஸ்த உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புதிய மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (30) பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மத்தியஸ்த சபையின் தவிசாளர் உட்பட 19 உறுப்பினர்கள் இதன் போது நியமனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதேச செயலர், இங்கு நியமனம் பெறுவோர் அனுபவம் வாய்ந்தவர்களாக உள்ளீர்கள். சொந்த பிரதேசம் என்றில்லாது எல்லோராலும் ஏற்கக் கூடிய தீர்மானங்களை திறம்பட நடை முறைப்படுத்தி இந்த சபை எதிர்காலத்தில் இயங்க வேண்டும் என்றார்.

நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தென் ஆபிரிக்கத் தூதர் மட்டக்களப்புக்கு விஜயம்!

(கே. எ. ஹமீட் )

தென் ஆபிரிக்க தூதர் சாண்டிலே எட்வின் சால் மட்டக்களப்பு மாவட்ட ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானாவை செவ்வாய்க்கிழமை(28) சந்தித்தார்.

ஏறாவூர் நகர சபைக்கு, சென்ற தென் ஆபிரிக்கத் தூதரை, நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா மற்றும் ஏறாவூர் நகர சபை செயலாளர் ஹமீம் ஆகியோர் வரவேற்றனர்.

இதன் போது ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் சந்திப்பும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக தென் ஆபிரிக்க நாட்டுக்கான தூதர், நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானாவிடம் கேட்டறிந்து கொண்டார். தென் ஆபிரிக்காவில் இன நல்லுறவு, இன நல்லிணக்கம், சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை பற்றி தூதர் இதன் போது விளக்கிக் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், சாவல்கள் என்பன தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா, தென் ஆபிரிக்க நாட்டுக்கான தூதரிடம் விளக்கி கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஏறாவூர் நகர சபை செயலர் எம்.ஹமீம், ஏறாவூர் பள்ளிவாசல்கள் சம்மேளனம், ஏறாவூர் ஜம் இய்யத்துல் உலமா சபை, ஏறாவூர் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# பொத்துவிலில் மதுபானசாலை அமைக்க எதிர்ப்புத் தெரிவிப்பு!

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிங்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட பொத்துவில் 11, வட்டி வெளி பிரதான வீதியில் வர்த்தகர் ஒருவரால் அமைக்கப்படவிருந்த மது பானசாலையை தடுத்து நிறுத்துமாறு பொத்துவில் பொது மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ்டம், இந்த மதுபான சாலையை நிறுவுவதை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதற்கு அமைய கடந்த செப்ரெம்பர் 19 ஆம் திகதி நிதி இராஜாங்க அமைச்சருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இது தொடர்பில் தெரிவித்திருந்தார்.

மக்களின் எதிர்ப்பையும், குறித்த



மதுபானசாலை அமைந்தால் உருவாகும் பிரச்சினைகளையும் தெளிவு படுத்தியிருந்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு இந்த மதுபானசாலைக்கு மக்களின் எதிர்ப்பு உள்ள விடயத்தை சுட்டிக்காட்டி அனுமதி வழங்கும் விடயத்தை மீள் பரிசீலிக்கு மாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ், இலங்கை மதுவரி திணைக் களத்தின் ஆணையாளர் நாயகத்திடம் முன்வைத்த மதுபானசாலை அனுமதிப் பத்திரம் சம்பந்தமான எதிர்ப்புகளை கவனத்தில் கொண்டு மதுபானசாலை யின் அனுமதி தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது.

இது தொடர்பிலான விளக்கங்களை வழங்க பொத்துவில் பிரதேச செயலகம், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீசுக்கு எதிர்வரும் 05 ஆம் திகதி அழைப்பு விடுத்துள்ளது.

முஸ்லிங்களை அதிகமாக கொண் டுள்ள பொத்துவில் பிரதேசத்தில் கலாச் சாரத்தையும், ஒழுக்க நெறிகளையும் சீரழிக்கும் மதுபானசாலை அமைப்பது கண்டிக்கத்தக்க விடயமாக பொது மக்களால் நோக்கப்படுவது குறிப்பிடத் தக்கது.



# நயினாதீவுக்கு விஜயம் செய்தார் இந்தியத் தூதர்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பால்கே நேற்று யாழ். தீவுப் பகுதிகளுக்கான விஜயத்தின் போது நயினாதீவுக்கும் சென்றுள் ளார்.

நயினா தீவுக்கு விஜயம் செய்த இந்திய தூதர் நாகபூசணி அம்மன் ஆலயம், மற்றும் நாக விகாரை ஆகியவற்றில் வழிபாடு நடத்தியுள்ளார்.

இதன்போது தூதருக்கு மலர் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி வரவேற்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து நாக விகாரை விகா ராதிபதியுடன் இடம்பெற்ற கலந்து ரையாடலில் நயினாதீவில் மீள் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டங் களை அமுல் செய்வது குறித்தும் அதன் அவசியம் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை இந்திய தூதர் யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.









# நெடுந்தீவில் சர்வதேச மீனவர் தினம்!

யாழ். தீவகப் பெண்கள் வலையமைப்பின் சர்வதேச மீனவர் தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (30)மாலை நெடுந்தீவு தேவானந்தா கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

நெடுந்தீவு பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதி திருமதி அமல ஜயான் றோயலா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி கலந்து கொண்டார்.

மற்றும் விருந்தினர்களாக நெடுந்தீவு கடற்தொழிலாளர் சமாசத்தின் தலைவர் லீலியன் குரூஸ், நெடுந்தீவு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வேர்ஜினி ஜெகாந்தன் மற்றும் மெசிடா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பெண்கள் வலையமைப்புப் பிரதிநிதிகள், மீனவ பெண்கள், மீனவ சங்க பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்றில் விவரங்கள் திரட்டல்

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் புள்ளி விவர திணைக்களத்தின் தரவேற்றல் செயற்பாடுகளை நேரில் கண்டறியும் கள விஜயம் இன்று உதவிப் பிரதேச செயலாளர் றாசித் எஹ்யா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர குமார திசாநாயக்க, மாவட்ட புள்ளி விவர திணைக்களத்தின் பணிப்பாளர் இந்திக விஜயகோன், வலய புள்ளி விவரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜானக சஜித், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், மேற்பார்வை உத்தியோகத்தர் என்.ரீ.மசூர், திட்ட முகாமையாளர் யூ.எல்.ஆஹீர், புள்ளி விவர அபிவிருத்தி உத்தியோகத்தர், இணைப்பாளர்கள், நிரற்படுத்தல் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.










# ஒதியமலைப் படுகொலை 39 ஆவது நினைவு தினம்!

**நாளை (02.12.2023) ஒதியமலை படுகொலை நினைவு தினம். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுர மாகிறது.**

இலங்கைத்தீவில் நடைபெற்று வரும் தமிழ் மக்களுக்கு எதிரான அரச வன்முறைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இதில் மிக மோசமான ஒரு அம்சம் இலங்கைத் தமிழர்களின் பாரிய அளவிலான படுகொலைகள் ஆகும். இவற்றில் சில தமிழர்களின் ஆழ்மனதில் ஆறாத பதிவுகளாக நிலைத்துள்ளன. அதில் ஒரு படு கொலைதான் 39 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றற ஒதிய மலைப் படுகொலை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதியமலை என்ற கிராமம் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண் டனை பெற்ற சிங்களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாதுகாப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதியிலும் குடியமர்த்தப்பட்டனர்.

1984 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29 ஆம் திகதியில் இருந்து மார்கழி 2 ஆம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவில் இருந்து ஒதியமலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர்.

மக்கள் அதிகாலை வீட்டின் கதவு களைத் திறந்த போது பச்சை நிற உடை களுடனும் ஆயுதங்களுடனும் இரா ணுவத்தினர் நின்றனர்.

“நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தினுள் கூட்டம் வைக்கப் போகி றோம் ஆம்பிளைகள் மட்டும் வாங்கோ” என சரளமாகத் தமிழில் கூறி முப்பதுக் கும் மேற்பட்ட ஆண்களை இராணுவத் தினர் கைது செய்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்துக்குள் அழைத்துச் சென்று அவர்களின் கைகளை பின்னால் கட்டி சித்திரவதை செய்தும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இராணுவம் சென்றபின் அங்கு சென்று பார்த்தபோது கைது செய்யப் பட்டவர்களில் இருபத்தேழு பேர் மிகவும் கோரமாகக் கொல்லப்பட்டு மண்ட பத்தினுள் கிடந்தார்கள்.

இறந்தவர்களில் அனேகர் திரு மணமாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம் பளை, பலி யிலிருந்து வயல் வேலைக்காக ஒதிய மலை வந்தவர்கள். வேறு சிலர் அயல் கிராமமான பட்டிக்குடியிருப்பில் இருந்து உறவினர் வீட்டுத் திருமணத்துக்காக வந்தவர்கள்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப் பட்ட இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்தார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலை வர் நா.கநதசாமி இப் படுகொலை தொடர்பாக கூறுகையில்–

“அன்றைய தினம் காலை 6.30 மணியளவில் எமது கிராமத்துக்குள் புகுந்த இலங்கை இராணுவத்தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணில் பட்டவர்கள் எல்லோரையும் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக் கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர்.

அந்த நேரம் அவ்வீதியால் சென்ற செல்வராசா என்பவரது உழவு இயந் திரத்தை மறித்து அதிலிருந்தவர்களை யும் பிடித்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்துக்குள் கொண்டு சென்றார்கள்.

சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கணபதிப்பிள்ளை, பொன்னம் பலம், சின்னையா, கனகையா ஆகி யோரைத் தங்களது பாதுகாப்புக்காக அவர்களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந் திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்று விட்டார்கள்.

காட்டுக்குச் சென்றிருந்த நான், இராணுவம் வந்ததை அறிந்து பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தினுள் ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இரு பத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்திருந்தனர். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண்ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந்ததையும் கண்டேன். அவர்களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களைச் சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங்கிருந்து கால்நடையாக முல்லைத்தீவு நோக்கி ஓடினோம்.

அந்த நேரம் இராணுவக் கெடுபிடி கள், ஊரடங்கு உத்தரவுகள் அதையும் மீறிப் பெரிய முயற்சியெடுத்து அரச அதிபர், பொலிஸ் அதிகாரிகள், நீதியா ளர்கள், உதவி அரச அதிபர், கிராம சேவையாளர்கள் என அனைவரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத்தைக் காட்டினோம்.

இறந்தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், மூளைகள் வெளியில் வந்த கோரக் காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார்கள்.

பின்னர் முழுக் கிராமத்தினரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு முன்பாகப் பெரிய மரங்கள் போட்டு அதன் மேல் அவர்களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கும் சமயம் முல் லைத்தீவிலிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலி ருந்தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்புக்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம் என்று தெரிவித்தார்.

மூலம்: தமிழினப் படுகொலைகள் 1956 – 2001 நூல்.






# உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் சைக்கிளோட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலில், கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம். தில்ஷான் ஒருங்கிணைப்பில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஏற்பாடு செய்திருந்த உலக எயிட்ஸ் தின விழிப்புணர்வூட்டல் சைக்கிளோட்டம், வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் இன்று (01)இடம்பெற்றது.

இந்தச் சைக்கிளோட்டத்தில் நிந்தவூர் லிவிங் வெல் அமைப்பின் சைக்கிளோட்ட வீரர்கள் பிரதானமாக பங்குபற்றினர்.நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலை என்பனவும் பங்குபற்றின. இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு விஷேட விழிப்புணர்வு வழங்கப்பட்டது.



# தாவரவியல் பேராசிரியராக பதவியுயர்வு!

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் தாவரவியல் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகள் பிறந்த காரைதீவு மண்ணைச் சேர்ந்த மதிவேந்தன் காரைதீவில் பயின்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2000 ஆண்டு விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டதாரியாக பட்டம் பெற்றார்.

பின்னர் 2007 இல் நோர்வேயில் விஞ்ஞான முதுமாணி பட்டத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் 2013 கலாநிதி பட்டத்தை பெற்றார்.

தற்போது (30.11.2023) தாவரவியல் துறை பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார் .

இந்தப் பதவி 2021 ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இவர் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரபல தமிழ் ஆசிரியர் பொன்.தவநாயகத்தின் புத்திரராவார்.

# தென்கிழக்கில் ஆய்வரங்கம்

(எம்.எப்.நவாஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டு திணைக்களம் தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறையுடன் இணைந்து ஆய்வரங்கம் ஒன்றை நடத்தவுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னரான இலக்கிய செல்நெறி என்ற தலைப்பில் நாளை சனிக்கிழமை (02) காலை 9 மணிக்கு தென் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸநாயக்கவும் சிறப்பு அதிதியாகக் கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் ஆஆ.பாசீலும் கலந்துகொள்வர்.

ஆய்வரங்கத்தை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நடத்தவுள்ளார். ஆய்வுப் பகிர்வின் நோக்கு தொடர்பில் ஓய்வு நிலை ஆய்வுப் பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கருத்துரையாற்றவுள்ளார்.

# தண்ணி முறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறப்பு!

## வெள்ள அபாய எச்சரிக்கை!!

(ச.தவசீலன் )

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரிய குளங்களில் ஒன்றாகக் காணப்படும் தண்ணி முறிப்புக் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்து காணப் படுகின்ற அடிப் படையில் தண்ணி முறிப்பு குளத்தின் ரேடியல் கதவுகள் 6” இருந்து 9” அளவில் திறக்கப்பட்டுள்ளன.



எனவே தண்ணி முறிப்பு குளத்தின் கீழ் பகுதியில் உள்ள மக்கள் குறிப்பாக விவசாயிகள் அவ தானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


முல்லைத்தீவு மாவட்ட அனைத்து முக அமைப்பினர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

# சென்னைக்கு அப்பால் திங்களன்று 'மிக்ஜாம்' புயல் கரையைக் கடக்கும்

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது நாளை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளது.

மேலும் இது மேற்கு - வட மேற்கு திசையில் நகர்ந்து வரும் 3 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் புயலாக வலுப்பெறும் என்றும், அடுத்த நாள் டிசம்பர் 4 ஆம் திகதி மாலை வட தமிழகம், தெற்கு ஆந்திரா கடலோர பகுதிகளில் சென்னைக்கும் மச்சிலி பட்டினத்திற்கும் இடையே புயலாகக் கரையை கடக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயலுக்கு 'மிக்ஜாம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.



காற்றழுத்த தாழ்வு மண்டலமானது புதுச்சேரிக்கு கிழக்கு தென்கிழக்கு திசையில் 900 கி.மீ. தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கு திசையில் 800 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

சென்னை எண்ணூர் - விசாகப் பட்டினம் இடையே புயல் கரையைக் கடக்கலாம். புயல் காரணமாக தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# ஆயுள்வேத சிரப் குடித்த ஐவர் குஜராத்தில் சாவு!

குஜராத் மாநிலம், கேதா மாவட்டத்தில் ஆயுர்வேத சிரப் குடித்து 5 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இவர்களைத் தவிர, மேலும் 2 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், கேதா மாவட்டத்தில் உள்ள நடியாட் டவுன் அருகே பிலோதரா கிராமத்தில் உள்ள கடை ஒன்றில் "கல்மேகசாவ்-அசாவா அரிஷ்டா" என்கிற பெயரில் ஆயுர்வேத சிரப் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

இந்த சிரப் குறைந்தது 50 பேருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த சிரப்பில் மிகவும் விஷத்தன்மை கொண்ட "மெத்தில் அல்கோஹால்" என்கிற வேதியியல் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. மேலும், சிரப்பை உட்கொண்ட கிராமவாசி ஒருவரின் இரத்த மாதிரியும் சோதனை செய்யப்பட்டது. அதில், மெத்தில் ஆல்கோஹால் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கேதா போலீஸ் கண்காணிப்பாளர் ராஜேஷ் காதியா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "கடந்த இரண்டு நாள்களில் ஆயுர்வேத சிரப் குடித்த 5 பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டு பேர் மருத்துவமனையில் தீவிர கண்காணிப்பில் உள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக மேற்கொண்டு விசாரணைக்காக கடைக்காரர் உள்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" எனவும் கூறினார்

# 5 மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் நாளை மறுதினம் வெளியாகுகின்றன

இந்தியாவில் ராஜஸ்தான், மத்தியபிரதேசம், சத்தீஷ்கார், தெலுங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் கடந்த மாதம் பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை மறுதினம் (3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை) எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன.

ராஜஸ்தான் மற்றும் சத்தீஷ்காரில் காங்கிரஸ், மத்தியபிரதேசத்தில் பாஜக, தெலுங்கானாவில் பாரதிய ராஷ்டிரிய சமிதி, மிசோரத்தில் மிசோ தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் தற்போது ஆட்சி செய்து வருகின்றன.

இந்நிலையில், தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு விவரங்கள் தற்போது வெளியாகியுள்ளன. பல மாநிலங்களிலும் போட்டி கடுமையாக இருப்பதாக அக்கணிப்புகள் கூறுகின்றன.





# இஸ்ரேல் - ஹமாஸ் போர்நிறுத்தம் இன்றுடன் முடிவுக்கு வருகின்றதா?

ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் மூண்டு சுமார் 46 நாள்கள் இடைவிடாத தாக்குதலில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இதனால் உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் போர் நிறத்தம் ஏற்பட முயற்சி மேற்கொண்டன. இதன் பயனாக கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. ஒரு பிணைக்கைதியை விடுவிக்க 3 பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

முதல் நான்கு நாள் போர் நிறுத்தத்தின்போது 50 பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 150 பாலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின் இரண்டு நாள்கள் இடைக்கால போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டது.

நேற்று மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்பட்டது. 7 ஆவது நாள் இடைக்கால போர் நிறுத்தத்திற்கான பேச்சு நீண்டு கொண்டே சென்றது. ஹமாஸ் அமைப்பினர் அனைத்து பாலஸ்தீனர்களையும் சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். நாங்கள் பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் இராணுவத்தினர் அனைவரையும் விடுதலை செய்கிறோம் எனத் தெரிவித்தது. ஆனால், இஸ்ரேல் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் செயல்பட முடியும் எனத் தெரிவித்தது. இதனால் இழுபறியான நிலையில் கடைசி நிமிடத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

இதனால் 7 ஆவது நாளான நேற்று ஹமாஸ் அமைப்பினர் பிணைக்கைதிகளை விடுவித்தனர். இஸ்ரேல் ஜெயிலில் இருந்து பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய நேரப்படி இன்று காலை 10.30 மணியுடன் ஏழு நாள் போர் இடைநிறுத்தம் முடிவுக்கு வருகிறது. இதனால் போர் நிறுத்தம் நீடிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கிடையே பிணைக்கைதிகள் - பாலஸ்தீனர்கள் விடுதலை பரிமாற்றத்திற்காக இடைக்கால போர் நிறுத்தம் நீடிக்கப்படுவதை விரும்புவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக நாடுகளும் இதைத்தான் விரும்புகின்றன. இஸ்ரேல் சென்றிருந்த அமெரிக்காவின் வெளியுறவுத்துறை மந்திரி ஆன்டணி பிளிங்கடன், “இந்த நடைமுறை இன்னும் நீடிக்க வேண்டும் என்பதை பார்க்கிறோம். 8 ஆவது நாள், அதையும் தாண்டி இருக்க வேண்டும் என விரும்புகிறோம்” என்றார்.

இஸ்ரேல் தெற்கு காசாவில் தாக்குதலை விரிவுப்படுத்தினால் மக்கள் அதிகமான அளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதால் பாதுகாப்பான இடத்தை உருவாக்கி, அந்த இடத்தில் குண்டு மழை பொழியாது என்பதை இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும் என அமெரிக்க திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

மத்தியஸ்தரராக செயல்பட்டு வந்த அமெரிக்கா, கத்தார், எகிப்து நாடுகள் இடைக்கால போர் நிறுதத்தை நீடிக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இன்று காலை போர் நிறுத்த நேரம் முடிவுக்கு வரும் நிலையில் போர் நிறுத்தம் குறித்து நிச்சயமற்ற நிலைமையே நீடித்தது.

# ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பு இந்தியாவிடம் இருந்து ஏற்றது பிரேசில்!

ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்த இந்தியாவின் பதவிக்காலம் நிறைவடைந்தது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஜி-20 உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் சிறப்பாக நடைபெற்றது. அமைப்பின் தலைவரான இந்தியா, ‘வாசுதெய்வ குடும்பகம் - ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த மாநாட்டை நடத்தியது.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்வைத்து கட்டமைக்கப்பட்ட இந்த மாநாட்டில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஜி-20 மாநாடு சிறப்பாக நடைபெற்ற பின்னர், அமைப்பின் அடுத்த ஆண்டுக்கான தலைவர் பொறுப்பை பிரேசில் அதிபர் லூயிஸ் லுலா டாசில்வாவிடம் பாரம்பரிய முறைப்படி பிரதமர் மோடி ஒப்படைத்தார்.



இந்த நிலையில், அதிகாரம் மிக்க இந்த அமைப்பின் தலைவர் பதவியை இன்று டிசம்பர் முதலாம் திகதி முதல் பிரேசில் நாடு முறைப்படி அலங்கரிக்கிறது. அத்துடன் அடுத்த உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் அடுத்த ஆண்டு நவம்பர் இறுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.